# அரசினர் மேல்நிலைப் பள்ளி வீடூர் – 605652
## காலாண்டுப் பொதுத் தேர்வு - I 2019 – 2020

**சமூகஅறிவியல்** காலம் அளவு : 2 :30 மணி

வகுப்பு : 10 மதிப்பெண் ; 100

பகுதி – I

( மதிப்பெண்கள் : 14 ) 14X1=14

குறிப்பு : (1) இப்பகுதியில் உள்ளஅனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(2) கொடுக்கப் பட்டுள்ள நான்கு மாற்றுவிடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் எனக் கூறியவர்யார்?
அ) லெனின்ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்

2. தென்னாப்பிக்காவின் இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்?
அ) வேவோர்டு ஆ) ஸ்மட்ஸ் இ) ஹெர்சாக் ஈ) போதா

3. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப் படுத்தினார்?
அ. ரஷ்யர்கள் ஆ. ஆராபியர்கள் இ. துருக்கியர்கள் ஈ. யூதர்கள்

4. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ 1979 ஆ, 1989 இ 1990 ஈ. 1991

5. . **கூற்று:** ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
**காரணம்:** ஜோதிபாபூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது. இ) இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

6. பழைய வண்டல்படிவுகளால் உருவான சமவெளி ___________.
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

7. **கூற்று:** (A) பருவக்காற்றுகள் எளிதில் புரிந்து கொள்ள இயலாத வானிலை நிகழ்வாகும்.
**காரணம்:** (R) வானிலை வல்லுநர்கள் பருவக்காற்றின் தோற்றத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர்.
அ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

8. பொருந்தாதைத் தேர்ந்தெடுக்கவும்
அ) கோதுமை ஆ) நெல் இ) திணை வகைகள் ஈ) காபி

9. இந்திய கடற்கரை பகுதி இரும்பு எஃகு தொழிலகங்களுள் ஒன்று அமைந்துள்ள இடம்.
அ) கொல்கத்தா ஆ) தூத்துக்குடி இ) கோவா ஈ) விசாகப்பட்டினம்

10. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம். -------------
அ) பெங்களுரு ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்

11. ஒருவெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்தியகுடியுரிமை பெறமுடியும்?
அ) வம்சாவளிஆ) பதிவுஇ) இயல்புரிமைஈ) மேற்கண்டஅனைத்தும்.

12. கூற்று (A) : மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.
காரணம் (R) : குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்,
அ) (A) தவறு ஆனால் (R) சரி
ஆ) (A) சரி ஆனால் (R) தவறு
இ) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) வுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) (A) மற்றும் (R) சரி மேலும் (R), (A) வுக்கான சரியான விளக்கமல்ல.

13. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை
அ) நீர்பாசனக கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை

14. .WTO வில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை
அ) 159 ஆ) 164 இ) 148 ஈ) 128

## பகுதி – II

**(மதிப்பெண்கள் : 20)** **10X2=20**

**எவையேனும் 10 வினாக்களுக்குமட்டும்விடையளிக்கவும்.**

28 வதுவினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?
16. மன்றோ கோட்பாட்டை விளக்குக.
17. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.
18. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
19. ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20. தக்காண பீடபூமி – குறிப்புவரைக.
21. அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
22. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?
23. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக..
24. இந்தியாவின் செம்மொழிகள் எவை.
25. ஆளுநராக நியமிக்கப் படுவதற்கான தகுதிகள் என்ன?
26. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.
27. உலக மயமாக்கல் என்றால் என்ன?
28. பன்னாட்டு வணிகம் - வரையறு.

## பகுதி - III

*( மதிப்பெண்கள் : 50 )* *10X5= 50*

எவையேனும் **10** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

**42** வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:

i). சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ----------------

ii). நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ----------- ஆவார்.

iii) உலகிலேயே மிக நீளமான அணை ----------

iv). உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ------

v). இந்தியாவில் மிகப்பெரிய துறை________ துறையாகும்.

30. **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| i). கமால் பாட்சா | - | ஸ்டாலின் கிரேடு |
| ii). ஹின்டன்பர்க் | - | விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் |
| iii). வோல்கா | - | தெற்கு வியட்நாம் |
| iv). நிகோடின் டியம் | - | துருக்கி |
| v). ஈஸ்வர்சந்திர வித்யாசாகர் | - | ஜெர்மனி |

31. **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| i). சாங்போ | - | இமயமலைகள் |
| ii). உயிர் பன்மைச் சிறப்பு பகுதிகள் | - | மும்பை |
| iii). டெகிரி அணை | - | வானூர்தி |
| iv). பாக்சைட் | - | இந்தியாவின் உயரமான அணை |
| v). மேசகான் கப்பல்கட்டும் தளம் | - | பிரம்மபுத்ரா |

32. அ) வேறுபடுத்துக :

i) அச்சுஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்

ii) இமாத்ரி மற்றும் இமாச்சல்

ஆ) காரணம்கூறுக: மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது.

33. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.

34. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

35. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி

39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி?.

40. உலக மயமாக்கலின் சவால்களை எழுதுக .

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும்வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்குபதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுதவேண்டும்.

41. கீழ்காண்பனவற்றிற்கு காலக் கோடுவரைக:
1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கியநிகழ்வுகளை காலக்கோட்டில்எழுதுக.

43. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

i). கிரேட் பிரிட்டன்

ii). இத்தாலி

iii). நியூசிலாந்து

iv) ஹவாய் தீவு

v) நாகசாகி

**பகுதி - IV**

( மதிப்பெண்கள் : 16) **2X8 = 16**

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.**

43. **(அ) பால்கன் போர்கள்**

i) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?
ii) முதல் பால்கன் போரின் விளைவுகள்யாவை?
iii) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?
iv) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?

ஆ). **ஹோ சி மின்**

i) ஹோ சி மின்எங்கே பிறந்தார்?
ii) ஹோ சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?
iii) ஹோசி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?
iv) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ- சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(அல்லது)

43. **இ) ஸ்டாலின் கிரேடு போர்**

i) ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை எப்போது தாக்கியது?
ii) ஸ்டலின் கிரேடின் முக்கிய உற்பத்திப் போருள்கள் யாவை?
iii)ஸ்ட லின் கிரேடைத் தாக்குவதற்கு ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன?
iv) ஸ்டலின் கிரேடு போரின் முக்கியத்துவ மென்ன?

**ஈ).அலிகார் இயக்கம்**

i) இவ்வியக்கத்தின் முக்கியக் குறிக்கோள் என்ன?
ii) இவ்வியக்கத்தின் ஆன்மாவாகக் கருதப்படுபவர் யார்?
iii) ஆங்கில நூல்கள் ஏன் உருது மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன?
iv) பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்ட கல்லூரியின் பெயரைக் குறிப்பிடுக.

குறிப்பு : பார்வையற்றமாணவர்கள்வரைபடத்தில்இடங்களைகுறிப்பிட்டுக்காட்டுவதற்கு பதிலாகஅவற்றைப்பற்றியகுறிப்புகள்மட்டும்எழுதவேண்டும்.

*i).* காரகோரம்

*ii).* சிந்து

*iii).* வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை

*iv).* பன்னா உயிர்கோள பெட்டகம்

*v).* கரிசல் மண் காணப்படும் இடம்

*vi).* ஹிராகுட் அணை

*vii).* மும்பை ஹை

*viii).* கொச்சி

( அல்லது )

*i).* ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

*ii).* இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்

*iii).* சென்னை முதல் டெல்லி வரையிலான ரயில்பாதை

*iv.)* நரோரா

*v).* விசாகப்பட்டினம்

*vi).* இலட்சத் தீவுகள்

*vii).* சுந்தரவனம்

# ALL THE BEST

**BY**

**R.MEGANATHAN. MA,B.ed,DTEd**

**( B,T ASST. SOCIAL SCIENCE)**

**GHSS, VEEDUR 605652**

**PH: 9543255318**